**அட்டவணை 01**

## நெற் பயிர்களுக்கான பசளைகள் சிபாரிசு

விவசாயத் திணைக்களம், நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம் ஆகியவற்றின் மூலம் நெற் பயிர்களுக்கு விவசாய காலநிலை வலயம் மற்றும் நீர்ப்பாசன முறை ஆகியவற்றின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பசளைகள் சிபாரிசை அடிப்படையாகக் கொண்டு பசளை ஆலோசனைகள் குழுவினது ஏகமனதான தீர்மானத்தின் பேரில் நெற் பசளை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் போது கருத்திற் கொள்ள வேண்டிய பசளை சிபாரிசுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

அந்தந்த கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களிலுள்ள அந்தந்த நீர்ப்பாசன முறைமையின் கீழ் வயல்களில் பயிரிடப்படும் நெற் பயிர்களுக்கான நிவாரண பசளைகளின் தேவை அளவை மதிப்பிடும் போது இந்த சிபாரிசுகளை கருத்திற் கொள்ள வேண்டும்.

**காலநிலை வலயம் 1:-** இடைவெப்ப மற்றும் உலர் வலயங்களில் நீர்ப்பாசன வசதிகளுள்ள வயல் காணிகளுக்கான பசளை சிபாரிசுகள்

**உள்ளடங்கும் பிரதேசங்கள்**
அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகல், அம்பாந்தோடடை, யாழ்ப்பாணம், புத்தளம், குருனாகல், மன்னார், வவுனியா, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, கண்டி (மினிபே, உடுதும்பறை, பன்வில, மெததும்பறை, குண்டசாலை, பாத்தஹேவாஹெட்ட மற்றும் தெல்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள்) மற்றும் நுவரெலியா (ஹங்குரங்கெத்த, வலபன ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள்), இரத்தினபுரி (எம்பிலிப்பிட்டிய, கொலன்ன, பலாங்கொட, இம்புல்பே, வெலிகெபொல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள்), மாத்தறை (ஹக்மன, கிரிந்த, தெய்வந்துறை, திக்வெல்ல, திஹகொட, கம்புறுபிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள்), மாத்தளை (யட்டவத்தை, உக்குவெல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள்) ஆகிய மாவட்டங்கள்.

| | ஹெக்டேயர் ஒன்றுக்கு கிலோ கிராம் | | |
|---|---|---|---|
| | யூரியா | ரீ.எஸ்.பி. | எம்.ஒ.பி. |
| பெரு நீர்ப்பாசனம்/மகாவலி | 205 | 48 | 53 |
| சிறிய நீர்ப்பாசனம் | 181 | 48 | 53 |

**காலநிலை வலயம் 2:-** ஈர வலயத்தில் நீர்ப்பாசன வசதிகளுள்ள வயல் காணிகளுக்கான பசளை சிபாரிசுகள்